**உதவி அமர்வு நீதிமன்றம்/சார்பு நீதிமன்றம், பத்மநாபபுரம்**

**முன்னிலை: திரு. K. மாரியப்பன், பி.ஏ., பி.எல்.,**

**உதவி அமர்வு நீதிபதி/சார்பு நீதிபதி, பத்மநாபபுரம்**

2026–ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 22–ம் நாள் புதன்கிழமை

**அமர்வு வழக்கு எண்.258/2017**

**CNR- TNKK-000932-2017**

| | | |
|---|---|---|
| தமிழக அரசுக்காக | : | காவல் ஆய்வாளர்,<br>தக்கலை காவல் நிலையம்.<br>குற்ற எண்.972/2012 |
| எதிரிகளின் பெயர்கள் | : | 1. ஆல்பர்ட் (எ) வெடிகுண்டு ஆல்பர்ட் ( வயது 39)<br>த/பெ. தேவதாஸ்<br>கவியலூர்,<br>காட்டாத்துறை அஞ்சல்.<br><br>2. ராஜேஷ், (வயது 32)<br>த/பெ. பொன்னுமணி<br>நாரகன்விளை,<br>காட்டாத்துறை அஞ்சல்,<br><br>3. முருகன் ( இறப்பு )<br>த/பெ. அம்புரோஸ்<br>காட்டாத்துறை அஞ்சல், |
| அரசு தரப்பில் எதிரிகளின் மீது முறையிடப்பட்ட குற்றச்சாட்டுகள் | : | அரசுத்தரப்பில் எதிரிகள் மீது இ.த.ச பிரிவுகள். 294(பி), 342, 307, 397 ன் படி குற்றம் முறையிடப்பட்டுள்ளது. |
| எதிரிகளின் மீது வனையப்பட்ட குற்றச்சாட்டுகள் | : | 1வது எதிரி மீது இ.த.ச பிரிவுகள். 294(பி), 342 ன் படியும், 2வது எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 294(பி), 307, 397ன் படியும் குற்றச்சாட்டுகள் வனையப்பட்டது |

நீதிபதியின் முடிவு : 1வது எதிரி மீது இ.த.ச பிரிவுகள். 294(பி), 342 ன் படியும், 2வது எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 294(பி), 307, 397ன் படியும் குற்றவாளி இல்லை.

தீர்ப்புரை : 1வது எதிரி மீது இ.த.ச பிரிவுகள். 294(பி), 342 ன் படியும், 2வது எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 294(பி), 307, 397ன் படியும் குற்றவாளிகள் அல்ல என முடிவு செய்யப்பட்டு எதிரிகளை கு. வி. மு. ச. பிரிவு. 235 (1) படி விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. 3வது எதிரி இறந்து விட்டதால் அவர் மீதுள்ள வழக்கு அற்றுப்போய்விட்டது.

இவ்வழக்கில் ஆர்.பி. எண்.12/2017–ல் தாக்கல் செய்யப்பட்டு குறியீடு செய்யப்பட்டுள்ள சா.பொ. 1 கத்தி உபயோகமற்றது என்பதால் அவற்றை மேல் முறையீடு அல்லது மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு அழிக்க வேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது. இவ்வழக்கில் தடயப்பொருள் 1. 10 கிராமம் எடையுள்ள தங்க கோவிகண்ணி செயின், தடயப்பொருள் 2. மோட்டார் சைக்கிள் ஒன்று ஆகியவைகளை அதன் உரிமையாளர்கள் நீதிமன்றத்தில் இருந்து இடைக்காலமாக பெற்று சென்றுள்ளார்கள் மேற்படி தடயப்பொருட்களை மேல்முறையீட்டின் தீர்ப்பிற்கு உட்பட்டு உரிமையாளரே வைத்துக்கொள்ளலாம் என்றும் பிணைமுறி ரத்து செய்யப்பட வேண்டுமென்றும் இந்நீதிமன்றம் உத்தரவிடுகின்றது.

இந்த வழக்கு என் முன்பு 1.04.2026 தேதியன்று இறுதியான விசாரணைக்கு வந்த போது குற்றமுறையிடுபவர் தரப்பில் கூடுதல் அரசு குற்றத்துறை வழக்குரைஞர் திரு. T. மைக்கேல் ரதீஸ் அவர்கள் ஆஜராகியும், எதிரி சார்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. A.P. ராஜன் & R. சதீஷ்குமார் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களை கேட்டும், அரசு தரப்பு சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் ஆகியவற்றை பரிசீலனை செய்தும், இதுநாள்வரை இந்த வழக்கு எனது பரிசீலனையின் கீழ் இருந்து வந்தபின் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்:

**தீர்ப்புரை**

இவ்வழக்கின் 1வது எதிரி ஆல்பர்ட் என்பவர் மணவாளக்குறிச்சி காவல்நிலைய குற்ற வழக்கில் குற்றவாளியாவார். அவரை சாட்சி 1 விஜு என்பவர் காவல்நிலையத்தில் காட்டிக்கொடுத்ததாக எதிரிகள் முன் விரோதம் கொண்டு கடந்த 23.08.2012ம் தேதி இரவு 10.30 மணியளவில் சாமியார் மடத்திற்கு வந்த சாட்சி 1 விஜுவை ஆபாசமாக பேசி அவருக்கு மரணத்தை விளைவிக்கும் நோக்கத்தோடு வெட்டுக்கத்தியால் இதோடு செத்துதொலைந்து போ என்று கூறி வெட்டியும் சாட்சி 1 ஒதுங்கிக்கொள்ளவே காயம் படவில்லை. பின்னர் எதிரிகள் ஆல்பர்ட்டும் முருகனும் சாட்சி 1 விஜுவை பிடித்துக்கொள்ள 2ம் எதிரி ராஜேஸ் வெட்டுக்கத்தியால் விஜுவின் மரணத்தை விளைவிக்கும் நோக்கத்தோடு அவரது தலையில் வெட்டி கொடுங்காயம் ஏற்படுத்தியுள்ளார் அதை தொடர்ந்து சாட்சியின் கழுத்தில் கிடந்த சுமார் 10 கிராம் எடையுள்ள தங்கச்சங்கிலியை பறித்து கொள்ளையடித்து சென்ற குற்றத்திற்காக எதிரிகள் மீது இ.த.ச பிரிவுகள். 294(பி), 342, 307, 397 ன் படி தக்கலை காவல் ஆய்வாளர் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. மேற்படி குற்ற இறுதி அறிக்கையை முதலில் பரிசீலனை செய்த பத்மனாபபுரம் நீதித்துறை நடுவர், மேற்படி குற்ற இறுதி அறிக்கையை முதல்

விசாரணை பதிவேட்டு வழக்கு எண். 23/2014 என கோப்பிற்கு எடுத்து, இவ்வழக்கின் எதிரிக்கு இவ்வழக்கின் ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் கு.வி.மு.ச பிரிவு 207–ன் கீழ் இலவசமாக வழங்கி பின்னர் இவ்வழக்கின் ஆவணங்களை பரிசீலனை செய்து எதிரிகள் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களானது அமர்வு நீதிமன்றத்தால் விசாரிக்கத்தக்க குற்றம் என்பதால் இவ்வழக்கினை மாண்புமிகு முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றம், கன்னியாகுமரி மாவட்டம் (இருப்பு) நாகர்கோவிலுக்கு கு.வி.மு.ச.209(அ) பிரிவின் கீழ் விசாரணைக்காக சமர்ப்பித்துள்ளார்.

3. மாண்புமிகு முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி, கன்னியாகுமரி மாவட்டம் (இருப்பு) நாகர்கோவில், நீதிமன்றத்தில் இவ்வழக்கானது அமர்வு வழக்கு எண்.258/2017 என கோப்புக்கு எடுக்கப்பட்டு மேல் விசாரணைக்காக இந்நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

4. இந்நீதிமன்றத்தில் எதிரிகள் ஆஜரான போது இருதரப்புகளை கேட்டும், அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களை பரிசீலனை செய்தும், எதிரிகள் குற்ற இறுதி அறிக்கையில் கண்டுள்ள குற்றங்களை புரிந்திருக்க கூடும் என்று அனுமானிக்க முதல் நிலையில் ஆதாரங்கள் இருந்ததால் 1வது எதிரி மீது இ.த.ச பிரிவுகள். 294(பி), 342 ன் படியும், 2வது எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 294(பி), 307, 397ன் படியும் குற்றச்சாட்டுகள் வனையப்பட்டு அதை விளக்கி கூறி வினவிய போது எதிரிகள் குற்றச்சாட்டுகளை மறுத்தார்கள். எனவே இவ்வழக்கு அரசு தரப்பு சாட்சிகளின் விசாரணைக்காக ஒத்திவைக்கப்பட்டிருந்தது.

5. இவ்வழக்கில் அரசு தரப்பில் 1 முதல் 14 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.12 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. சான்று பொருள் 1 குறியீடு செய்யப்பட்டுள்ளது.

6. **அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் பின்வருமாறு**

அ.சா.1 விஜு தனது சாட்சியத்தில், எதிரிகளை தெரியும் என்றும், 1ம் எதிரி ஆல்பர்டை சில ஆண்டுகளுக்கு முன்பு போலிசார் பிடித்து சென்றதாகவும் தான் தான் தகவல் சொன்னதாக எதிரிகளுக்கு தன் மீது மனவருத்தம் ஏற்பட்டதாகவும் தான் தனது நண்பர்களுடன் திருநெல்வேலி சென்று விட்டு 23.08.2012ம் தேதி இரவு 10.30 மணிக்கு சுவாமியார்மடம் பஸ் ஸ்டாப்பில் இறங்கியதாகவும் அருகில் உள்ள திரிஸ்டர் ஹோட்டலில் சாப்பிட போனதாகவும் எதிரிகள் மூவரும் கடைக்குள் இருந்ததாகவும், தன்னை பார்த்ததும் நீ தன்னை போலீசில் காட்டிக்கொடுத்தாயா உன்னால் தனக்கு ரூ.50,000/– செலவானது என்று சொல்லி தகராறு செய்ததாகவும் 1ம் எதிரி ஆல்பர்ட் நீ செத்து தொலைந்து போன என்று சொல்லி வெட்டுக்கத்தியால் தன்னை வெட்ட வந்ததாகவும், தான் கையால் தடுத்த போது வெட்டுகத்தி கீழே விழுந்ததாகவும் பின்னர் 1ம் எதிரி ஆல்பர்ட் 3ம் எதிரி முருகனும் தன்னை இறுக்க பிடித்துக்கொண்டார்கள் என்றும் இவனை கொல்லாமல் விடக்கூடாது என்றும் சொல்லி 2ம் எதிரி ராஜேஷ் வெட்டுக்கத்தி எடுத்து முன்பக்க தலையில் வெட்டினார் என்றும், நான் நிலைதடுமாறி கீழே விழுந்தேன் என்றும், எனது கழுத்தில் கிடந்த 2 பவுன் தங்க செயினை 1ம் எதிரி ஆல்பர்ட் பிடுங்கி சென்று கேஸ் செலவிற்கு ஆகும் என்று சொல்லி கொண்டு சென்றதாகவும் எதிரிகள் மூவரும் அங்கிருந்து ஒரு யமஹா பைக்கில் தப்பி சென்று விட்டதாகவும் அதன் பதிவு எண்.ற்றி.என்.74 எக்ஸ் 4496 ஆகும் என்றும், அங்கு சத்தம் கேட்டு ஆட்கள் கூடிவிட்டார்கள் எதிரிகள் பயந்து ஓடி விட்டதாகவும் நண்பர் ரமேஷ் உதவியுடன் அருகில் உள்ள ரத்னா மருத்துவமனைக்கு சென்றதாகவும் சுமார் 8 நாட்கள் வரை உள்நோயாளியபக சிகிச்சை பெற்றதாகவும் மறு நாள் தக்கலை போலீசார் நடந்த சம்பவம் குறித்து காலை 07.00 மணிக்கு புகார் வாக்குமூலம் வாங்கியதாகவும் அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

7. அ.சா.2 ஜஸ்டஸ் தனது சாட்சியத்தில் எதிரிகளை தெரியும் என்றும், 1ம் எதிரிக்கும, அ.சா.1க்கும் ஏற்கனவே முன் விரோதம் இருந்து வந்ததாகவும் என்ன பிரச்சனை என்று முழுவதுமாக தெரியாது என்றும், தானும் அ.சா.1ம் நண்பர்களுடன் திருநெல்வேலி சென்று விட்டு 23.08.2012ம் தேதி இரவு 10.30 மணிக்கு சுவாமியார்மடம் பஸ்ஸ்டாப்பில் இறங்கியதாகவும், அருகில் உள்ள திரிஸ்டார் ஓட்டவில் சாப்பிட போனதாகவும் தானும், அ.சா.1ம் ராஜகுமார் மற்றும் சதீஷ்குமார் ஆகியவர்களுடன் தான் உள்ளே போனதாகவும் எதிரிகள் மூவரும் கடைக்குள் இருந்தார்கள் என்றும் தன்னை பார்த்ததும் நீ என்ன போலீசில் காட்டிக்கொடுத்தாயா உன்னால் எனக்கு ரூ.50,000/– செலவானது என்று சொல்லி 1ம் எதிரி அ,சா.1–டம் தகராறு செய்ததாகவும், 1ம் எதிரி ஆல்பர்ட் வெட்டுக்கத்தியால் அ.சா.1ஐ வெட்ட வந்ததாகவும் அ.சா.1 கையால் தடுத்ததாகவும் வெட்டுக்கத்தி கீழே விழுந்ததாகவும் பின்னர் 1ம் எதிரி ஆல்பர்டும் 3ம் எதிரி முருகனும் அ.சா.1ஐ இறுக்க பிடித்துக்கொண்டதாகவும் இவனை இதோடு செத்து தொலைந்து போ என்று சொல்லி 2ம் எதிரி ராஜேஷ் வெட்டுக்கத்தி எடுத்து அ.சா.1ன் முன்பக்க தலையில் வெட்டியதாகவும் அ.சா.1 நிலைதடுமாறி கீழே விழுந்ததாகவும் அ.சா.1ன் கழுத்தில் கிடந்த 2 பவுன் தங்க செயினை 1ம் எதிரி ஆல்பர்ட் பிடுங்கி சென்று கேஸ் செலவிற்கு ஆகும் என்று சொல்லி எடுத்துச்சென்றதாகவும் எதிரிகள் மூவரும் அங்கிருந்து ஒரு யமஹா பைக்கில் தப்பிச்சென்று விட்டதாகவும், அதன் பதிவு எண். தெரியாது என்றும் அங்கு சத்தம் கேட்டு ஆட்கள் கூடியதாகவும் அ.சா.1 அங்கிருந்தவர்கள் உதவியுடன் அருகில் உள்ள ரத்னா மருத்துவமனை சென்றதாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

8. அ.சா.3 ராஜகுமார் தனது சாட்சியத்தில், எதிரிகளை தெரியும் என்றும், அ.சா.1, 2ஐ தெரியும் என்றும், 1ம் எதிரிக்கும் அ.சா.1–க்கும் ஏற்கனவே முன்விரோதம் இருந்ததாகவும். 1ம் எதிரியை போலீசில் பிடித்துக்கொடுத்தார் என்பது பிரச்சனையாக இருந்ததாகவும், தானும் அ.சா.1ம் நணபர்களுடன்

திருநெல்வேலி சென்று விட்டு 23.08.2012 அன்று இரவு 10.30 மணிக்கு சுவாமியார்மடம் பஸ் ஸ்டாப்பில் இறங்கியதாகவும் அருகில் உள்ள திரிஸ்டார் ஓட்டலில் சாப்பிட போனதாகவும், தானும், அ.சா.1, 2 மற்றும் ராஜகுமார் ஆகியோருடன் தான் உள்ளே போக போனதாகவும், எதிரிகள் மூவரும் கடைக்குள் இருந்ததாகவும் தன்னை பார்த்ததும் நீ என்ன போலீசில் காட்டிக்கொடுத்தாயா உன்னால் தனக்கு ரூ50,000/– செலவானது என்று சொல்லி 1ம் எதிரி அ.சா.1–டம் தகராறு செய்ததாகவும் 1ம் எதிரி ஆல்பர்ட் வெட்டுக்கத்தியால் அ.சா.1ஐ வெட்ட வந்தார் என்றும் அ.சா.1 கையால் தடுத்தார் என்றும், வெட்டுக்கத்தி கீழே விழுந்ததாகவும், பின்னர் 1ம் எதிரி ஆல்பர்டும், 3ம் எதிரி முருகனும் அ.சா.1ஐ இறுக்க பிடித்துக்கொண்டதாகவும் இவனை இதோடு செத்து தொலைந்து போ என்று சொல்லி 2ம் எதிரி ராஜேஷ் வெட்டுக்கத்தி எடுத்து அ.சா.1ன் முன் பக்க தலையில் வெட்டியதாகவும் அ.சா.1 நிலைதடுமாறி கீழே விழுந்ததாகவும் எதிரிகள் மூவரும் அங்கிருந்து ஒரு யமஹா பைக்கில் தப்பி சென்று விட்டதாகவும் அதன் பதிவு எண் தெரியாது என்றும் அங்கு சத்தம் கேட்டு ஆட்கள் கூடிவிட்டதாகவும், அ.சா.1 அங்கிருந்தவர்கள் உதவியுடன் அருகில் உள்ள ரத்னா மருத்துவமனை சென்றதாக சாட்சியம் அளித்துள்ளார்.

9. அ.சா.11 டாக்டர். மதியழகன் தனது சாட்சியத்தில் கடந்த 23.08.2012ம் தேதி இரவு 11.30 மணிக்கு பணியில் இருந்த போது காட்டாத்துறை வாழ்வச்சகோஷ்டம் செல்லதுரை என்பவரது மகன் 31 வயதுடைய விஜு என்பவர் அவரது நண்பர் ரமேஷ் என்பவருடன் சிகிச்சைக்காக வந்ததாகவும் அவர் தன்னிடம் தெரிந்த நபரால் அரிவாள் கொண்டு தாக்கப்பட்டதாக கூறியதாகவும் அவரை தான் பரிசோதித்த போது அவருக்கு கீழ்கண்ட காயங்கள் இருந்ததாகவும், முன்தலை பகுதியில் 10 x 6 x 5 cm அளவிலான வெட்டுக்காயம் இருந்ததாகவும், அவருக்கு ஸ்கேன் பரிசோதனை செய்த போது மேற்படி 1வது காயத்தில் எலும்பு முறிவு இருந்ததாகவும், மேலும் மூளையின் முன்பகுதியில் ரத்தக்கட்டுடன் கூடிய

வீக்ககாயம் காணப்பட்டதாகவும் அவருக்கு வெளிக்காயத்திற்கு தையல் போடப்பட்டதாகவும் 30.08.2012ம் தேதியன்று மருத்துவ சிகிச்சையிலிருந்து விடுவிக்கப்பட்டதாகவும் அவருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்று சான்று வழங்கியதாகவும் அந்த காயச்சான்று அ.சா.ஆ.6 என்று சாட்சியம் அளித்துள்ளார்.

10. அ.சா.12 ஸ்டீபன் தனது சாட்சியத்தில் தான் தக்கலை காவல்நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்த போது 24.08.2012ம் தேதி காலை 06.00 மணிக்கு நிலைய பொறுப்பில் இருந்த போது சுவாமியார்மடம், ரெத்தினா மருத்துவமனையிலிருந்து கிடைத்த தகவலை பெற்று அங்கு சென்று அங்கு சிகிச்சையில் இருந்த விஜு என்பவரை விசாரித்து புகார் வாக்குமூலம் கொடுத்ததாகவும் அதனை பதிவு செய்து நிலையம் வந்து 08.00 மணிக்கு புகார்வாக்குமூலத்தின் தன்மைப்படி நிலைய குற்ற எண்.972/2012 பிரிவுகள் 294(பி), 342, 307, 394 இ.த.ச படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததாகவும் அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.7 என்றும், அசலை நீதிமன்றத்திற்கு அனுப்பி விட்டு ஒரு நகலை காவல் ஆய்வாளர் பார்வைக்கு வைத்ததாக சாட்சியம் அளித்துள்ளார்.

11. அ.சா.13 பரமசிவம் தனது சாட்சியத்தில், கடந்த 24.08.2012ம் தேதி தக்கலை காவல் வட்ட ஆய்வாளராக பணியாற்றிய போது தக்கலை காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியாற்றிய திரு.ஸ்டீபன் என்பவர் பதிவு செய்து வைத்திருந்த நிலைய குற்றஎண்.972/2012 பிரிவுகள் 294(பி). 342, 307 மற்றும் 394 இ.த.ச படியான வழக்கினை தனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 09.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் அஜித், மணிகண்டன் ஆகியவர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் அ.சா.ஆ.8 மற்றும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ.9 தயார் செய்ததாகவும் பின்னர் வழக்கின் சாட்சிகளான விஜு, ஜஸ்டஸ், ராஜக்குமார், சதீஷ்குமார், ஸ்ரீஹரி, ராஜாசிங், பால்ராஜ், சுகந்த குமாரி, ஆகியவர்களை தனி

தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றும், பின்னர் 25.08.2012ம் தேதி காலை 09.00 மணிக்கு கஞ்சிமடம், ஐயப்பன் கோவில் அருகே வைத்து 1வது எதிரியை கைது செய்து விசாரிக்க அவர் எவ்வித துன்புறுத்தலுமின்றி தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் மணிகண்டன், ஜஸ்டின் ராஜ் ஆகியவர்கள் முன்னிலையில் பதிவு செய்ததாகவும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எதிரி வெட்ட பயன்படுத்திய கத்தியையும், செயினையும், இருசக்கர வாகனம் ஆகியவற்றை அத்தாட்சியில் கைப்பற்றியதாகவும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.10 என்றும், அத்தாட்சி அ.சா.ஆ.11 என்றும், படிவம் 95 அ.சா.ஆ.12 என்றும், கத்தி சா.பொ.1 என்றும், பின்னர் எதிரியையும், வழக்குச் சொத்தையும் நிலையம் கொண்டு வந்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பியதாகவும் அன்றைய தினம் 14.00 மணிக்கு வழக்கில் சம்மந்தப்பட்ட 3வது எதிரி முருகன் என்பவரை காட்டாத்துறை பஸ் பேருந்து நிறுத்ததில் வைத்து காரணம் கூறி கைது செய்து 14.30 மணிக்கு நிலையம் கொண்டு வந்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பியதாகவும் பின்னர் தான் பணி மாறுதலில் சென்று விட்ட படியால் வழக்கு கோப்பினை தனக்கு பின் வந்த காவல் ஆய்வாளர் வசம் ஒப்படைத்ததாக சாட்சியம் அளித்துள்ளார்.

12. அ.சா.14 ஜோசப் சிறில் தனது சாட்சியத்தில், கடந்த 2012ம் வருடம் தக்கலை வட்ட ஆய்வாளராக பணியாற்றிய போது தக்கலை காவல்நிலைய குற்ற எண்.972/2012 பிரிவுகள் 294(பி, 342, 307, 397 இ.த.ச வழக்கை தனக்கு முந்தைய காவல் ஆய்வாளர் திரு. பரமசிவம் அவர்கள் விசாரித்து தன்னிடம் ஒப்படைத்ததை தான் 04.02.2013ம் தேதி தனது விசாரணைக்கு எடுத்து கொண்டு ஏற்கனவே முதல் விசாரணை அதிகாரி விசாரணை செய்த சாட்சிகளை விசாரணை செய்ததில் அவரிடம் சொன்னது போலவே சாட்சிகள் என்னிடமும் கூறியதால் நான் தனியாக வாக்குமூலம் எதுவும் பதிவு செய்யவில்லை என்றும்,

இவ்வழக்கில் முதலாவது எதிரி ஆல்பர்ட், 3வது எதிரி முருகன் ஆகியவர்களை முதல் விசாரணை அதிகாரி கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியுள்ளதாகவும் 2வது எதிரி ராஜேஷ் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை உத்தரவு படி முன் ஜாமீன் பெற்றுள்ளதாகவும் 10.03.2013ம் தேதி இவ்வழக்கில் காயம்பட்ட புகார்தாரர் விஜி என்பவருக்கு மருத்துவ சிகிச்சை அளித்து சான்று தந்த மருத்துவர் திரு. மகிலன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும் வழக்கின் விசாரணை முடித்து அரசு வழக்கறிஞரின் கருத்துரை பெற்று எதிரிகள் மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்ததாக சாட்சியம் அளித்துள்ளார்.

13. அரசு தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சிகளின் சாட்சியங்களில் இருந்து எதிரிகளுக்கு எதிரான சங்கதிகள் குறித்து கு.வி.மு.ச. பிரிவு 313(1) (அ)–ன் கீழ் வினவியபோது எதிரிகள் சாட்சிகளின் சாட்சியங்களை மறுத்தார்கள். எதிரிகள் தரப்பில் சாட்சிகள் விசாரணை செய்யப்படவில்லை. இரு தரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் கவனமாக பரிசீலனை செய்யப்பட்டது.

14. இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், இந்நீதிமன்றத்தில் எதிரிகள் மீது இந்நீதிமன்றத்தால் வனையப்பட்ட குற்றச்சாட்டுக்கள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதே ஆகும்.

15. ***<u>பிரச்சனைக்கான தீர்வு</u>*** ?.

அரசுத்தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தன்னுடைய வாதத்தின் போது, 1வது எதிரியை போலிசில் அ.சா.1 காட்டிக்கொடுத்ததாக ஏற்பட்ட முன் விரோதத்தில் 23.08.2012ம் தேதி இரவு 10.30 மணிக்கு சாமியார்மடத்தில் வைத்து 1ம் எதிரியும் 3ம் எதிரியும் அ.சா.1 ஐ பிடித்துக்கொள்ள 2வது எதிரி வெட்டுக்கத்தியால் அ.சா.1ன்

தலையில் வெட்டி கொடுங்காயங்கள் ஏற்படுத்தினர் என்பது காயம்பட்ட அ.சா.1ன் சாட்சியத்தின் மூலமும், கண்ணால் கண்ட அ.சா.2, அ.சா.3 ஆகியோரின் சாட்சியத்திலிருந்தும் காயம்பட்ட அ.சா.1க்கு சிகிச்சை வழங்கிய மருத்துவர் அ.சா.11 ன் சாட்சியத்திலிருந்தும் சந்தேகத்திற்கிடமின்றி எடுத்துக் காட்டப்பட்டுள்ளதாகவும் அ.சா.1ன் தலையில் வெட்டி கொடுங்காயங்கள் ஏற்படுத்தி கொலை செய்ய முயற்சி செய்த குற்றச்சாட்டு சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதாகவும், எதிரிகளுக்கு தகுந்த தண்டனை வழங்க வேண்டும் என்றும் வாதிட்டார்.

16. 1, 2 எதிரிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தின் போது, இவ்வழக்கில் காயம்பட்ட சாட்சியான அ.சா.1 மற்றும் கண்ணால் கண்ட சாட்சியான அ.சா.2 மற்றும் அ.சா.3 ஆகியோர் போலிசார் போட்ட பொய் வழக்கிற்காக எப்படி சாட்சியம் அளிக்க வேண்டுமென்று சொல்லிக்கொடுத்ததன் அடிப்படையில் தான் சாட்சியம் அளித்ததாக ஒப்புக்கொண்டுள்ள நிலையில், எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றும் எனவே சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு சாதகமாக வழங்கி எதிரிகளை விடுதலை செய்ய வேண்டும் என்றும் வாதிட்டார்.

17. இருதரப்பு வாதங்கள், வழக்கு ஆவணங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன. அரசு தரப்பு வழக்கின் படி இவ்வழக்கின் 1வது எதிரி மீது மணவாளக்குறிச்சி காவல்நிலையத்தில் இருந்த வழக்கில் அவரை போலிசார் பிடித்து சென்று விட்டதால் அதற்கு அ.சா.1 தான் காரணம் என நினைத்து அவர் மீது விரோதம் கொண்டு 23.08.2012ம் தேதி இரவு 10.30 மணியளவில் அ.சா.1 அவரது நண்பர்களான அ.சா.2, அ.சா.3 ஆகியோருடன் சேர்ந்து சுவாமியார் மடம் கிறிஸ்டோபர் லஞ்சுஹோம் கடைக்கு சாப்பிட வந்த போது, எதிரிகள் அவர்களிடம் தாகராறு செய்து தகாத வார்த்தைகள் பேசி 1, 3 எதிரிகள் அ.சா.1 ஐ

பிடித்துக்கொள்ள 2வது எதிரி வெட்டுக்கத்தியால் வெட்டி அ.சா.1ன் முன் தலையில் வெட்டி கொலை செய்ய முயற்றி செய்தார்கள் என்பதும் காயம்பட்ட அ.சா.1 மற்றும் அ.சா.3ன் சாட்சியத்தில் தங்கள் முதல் விசாரணையில் எதிரிகள் அ.சா.1 ஐ பிடித்துக்கொண்ட விதம் குறித்தும் 2வது எதிரி அ.சா.1ஐ வெட்டுக்கத்தியால் வெட்டி காயம்படுத்தியதாக சாட்சியம் அளித்துள்ளார்கள். வெட்டுக்காயம்பட்ட அ.சா.1க்கு சுவாமியார் மடம் ரத்னா மருத்துவமனையில் வைத்து சிகிச்சை வழங்கிய அ.சா.11 தனது சாட்சியத்தில், அ.சா.1ன் முன் தலை பகுதியில் 10 x 6 x 5 cm அளவிலான வெட்டுக்காயம் இருந்ததாகவும், அவருக்கு ஸ்கேன் பரிசோதனை செய்த போது மேற்படி 1வது காயத்தில் எலும்பு முறிவு இருந்ததாகவும், மேலும் மூளையின் முன்பகுதியில் ரத்தக்கட்டுடன் கூடிய வீக்ககாயம் காணப்பட்டதாக சாட்சியம் அளித்து காயச்சான்றிதழ் அ.சா.ஆ–6 குறியீடு செய்யப்பட்டுள்ளது.

18. இந்நிலையில், சம்பவத்தின் போது காயமடைந்த சாட்சியான அ.சா.1 சம்பவத்தை கண்ணால் கண்ட அ.சா.2, 3 ஆகியோர் தங்கள் சாட்சியத்தின் குறுக்கு விசாரணை சாட்சியத்தில், போலிசார் சொல்லி கொடுத்து தான் சாட்சியம் அளிப்பதாகவும், அ.சா.ஆ–1 புகார் வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் போலிசார் எழுதி கொண்டதாகவும் சாட்சியம் அளித்துள்ளார். மேலும் 23.08.2012ம் தேதி இரவு 10.30 மணிக்கு நடைபெற்ற சம்பவத்திற்கு ரத்தினா மருத்துவமனையில் இருந்து போலிசாருக்கு 11.30 மணியளவில் தகவல் தெரிவிக்கப்பட்டும் போலிசார் 7 மணி நேரம் காலதாமதமாக அ.சா.ஆ–1 புகார் வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். மேற்படி காலதாமதத்திற்கு என்ன காரணம் என்பது குறித்து அரசுத்தரப்பில் எவ்வித விளக்கமும் கொடுக்கப்படவில்லை.

19. மேலும் காயம்பட்ட சாட்சியும் கண்ணால் கண்ட சாட்சிகளும் எதிரிகள் மீது போலிசார் சொல்லி கொடுத்து தான் தாங்கள் சாட்சியம்

அளிப்பதாகவும் எதிரிகள் இவ்வழக்கு சம்பவத்தில் இல்லை என்றும் குறுக்கு விசாரணை சாட்சியத்தில் சாட்சியம் அளித்துள்ளார். அப்படியெனில் அ.சா.1க்கு யாரால் காயம் ஏற்படுத்தப்பட்டது என்பது பற்றி இந்நீதிமன்றத்தில் மிகுந்த சந்கேதம் எழுகிறது. எனவே எதிரிகள் மீது அ.சா.ஆ–7 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த அ.சா.12 மற்றும் விசாரணை அதிகாரியான அ.சா.13, அ.சா.14 ஆகியோரின் சாட்சியத்தை மட்டும் வைத்துக்கொண்டு எதிரிகள் மீதான குற்றச்சாட்டு அரசுத்தரப்பால் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணம் செய்யப்பட்டதாக கருத முடியாது. காயம்பட்ட சாட்சியான அ.சா.1 தனது சாட்சியத்தில், போலிசார் சொல்லி கொடுத்துதான் சாட்சியம் அளிப்பதாக புகார் வாக்குமூலம் போலிசார் சொல்லி எழுதப்பட்டது என சாட்சியம் அளித்தபடியால் எதிரிகளுக்கு எதிரான அரசு தரப்பு குற்றச்சாட்டு சந்தேகத்திகிடமின்றி நிரூபணம் செய்யப்படவில்லை. எனவே சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு வழங்கி எதிரிகளை விடுதலை செய்யலாம் என இந்நீதிமன்றம் கருதுகிறது.

முடிவாக, 1வது எதிரி மீது இ.த.ச பிரிவுகள். 294(பி), 342 ன் படியும், 2வது எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 294(பி), 307, 397ன் படியும் குற்றவாளிகள் அல்ல என முடிவு செய்யப்பட்டு எதிரிகளை கு. வி. மு. ச. பிரிவு. 235 (1) படி விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. 3வது எதிரி இறந்து விட்டதால் அவர் மீதுள்ள வழக்கு அற்றுப்போய்விட்டது.

இவ்வழக்கில் ஆர்.பி. எண்.12/2017–ல் தாக்கல் செய்யப்பட்டு குறியீடு செய்யப்பட்டுள்ள சா.பொ. 1 கத்தி உபயோகமற்றது என்பதால் அவற்றை மேல் முறையீடு அல்லது மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு அழிக்க வேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது. இவ்வழக்கில் தடயப்பொருள் 1. 10 கிராமம் எடையுள்ள தங்ககோவிகண்ணி செயின், தடயப்பொருள் 2. மோட்டார் சைக்கிள் ஒன்று ஆகியவைகளை அதன் உரிமையாளர்கள் நீதிமன்றத்தில் இருந்து இடைக்காலமாக பெற்று சென்றுள்ளார்கள் மேற்படி தடயப்பொருட்களை

மேல்முறையீட்டின் தீர்ப்பிற்கு உட்பட்டு உரிமையாளரே வைத்துக்கொள்ளலாம் என்றும் பிணைமுறி ரத்து செய்யப்பட வேண்டுமென்றும் இந்நீதிமன்றம் உத்தரவிடுகின்றது.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தாளரிடம் சொல்லப்பட்டு, அவரால் விரிவாக்கம் செய்து தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2026-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 22 ஆம் நாளாகிய இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

K MARIAPPAN Digitally signed by K MARIAPPAN Date: 2026.04.25 16:36:39 +0530

உதவி அமர்வு நீதிபதி/சார்பு நீதிபதி
பத்மனாபபுரம்

**<u>இணைப்பு:-</u>**

**<u>அரசு தரப்பு சாட்சிகள் :-</u>**

| | | | |
|---|---|---|---|
| 1) | அ.சா.1 | - | திரு.விஜு |
| 2) | அ.சா.2 | - | திரு. ஜஸ்டஸ் |
| 3) | அ.சா.3 | - | திரு. ராஜகுமார் |
| 4) | அ.சா.4 | - | திருமதி. சுகந்தகுமாரி |
| 5) | அ.சா.5 | - | திரு. ஸ்ரீஹரி |
| 6 | அ.சா.6 | - | திரு. ராஜாசிங் |
| 7) | அ.சா.7 | - | திரு. பால்ராஜ் |
| 8) | அ.சா.8 | - | திரு.மணிகண்டன் |
| 9) | அ.சா.9 | - | திரு.அஜித் |
| 10 | அ.சா.10 | - | திரு. ரமேஷ் |
| 11) | அ.சா.11 | - | திரு. மகிழன் |
| 12) | அ.சா.12 | - | திரு. ஸ்டீபன் |
| 13) | அ.சா.13 | - | திரு. பரமசிவம் |
| 14) | அ.சா.14 | - | திரு. ஜோசப்சிறில் |

**<u>அரசு தரப்பு சான்றாவணங்கள் ;</u>**

| | | | |
|---|---|---|---|
| 1. | அ.சா.ஆ.1 | – | புகார் வாக்குமூலம் |
| 2. | அ.சா.ஆ.2 | – | அத்தாட்சியில் உள்ள 2வது கையெழுத்து |
| 3. | அ.சா.ஆ.3 | – | ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2வது கையெழுத்து |
| 4. | அ.சா.ஆ.4 | – | மகஜரில் உள்ள முதலாவது கையெழுத்து |
| 5. | அ.சா.ஆ.5 | – | பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையெழுத்து |
| 6. | அ.சா.ஆ.6 | – | காயச்சான்று |
| 7. | அ.சா.ஆ.7 | – | முதல் தகவல் அறிக்கை |
| 8. | அ.சா.ஆ.8 | .– | பார்வை மகஜர் |
| 9. | அ.சா.ஆ.9 | – | வரைபடம் |
| 10. | அ.சா.ஆ.10 | – | ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி |
| 11. | அ.சா.ஆ.11 | – | அத்தாட்சி |
| 12. | அ.சா.ஆ.12 | – | படிவம் 95 |

**<u>அரசு தரப்பு சான்று பொருள்கள்</u>**

சா.பொ.1 – கத்தி

**<u>தடயப்பொருட்கள்</u>**

1. 10 கிராமம் எடையுள்ள தங்ககோவிகண்ணி செயின்,

2. மோட்டார் சைக்கிள்

**<u>எதிரிகள் தரப்பு சாட்சிகள்</u>**

– இல்லை –

**<u>எதிரிகள் தரப்பு சான்றாவணங்கள்;</u>**

**இல்லை**

K MARIAPPAN
Digitally signed by K MARIAPPAN
Date: 2026.04.25 16:36:49 +0530

உதவி அமர்வு நீதிபதி/சார்பு நீதிபதி,

பத்மனாபபுரம்

PSC

Judgment

in S.C.No.258/2017

Dt. 22.04.2026.